
உ
சிவமயம்



வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்டு
தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான

# அமரர் இராசபூமலர் நமசிவாயம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**04.12.2007**

# சமர்ப்பணம்

உதிரத்தைப் பாலாக்கி, அன்பே உலகமகா சக்தி எனப் பரிந்து எம்மை நல்வழிப்படுத்தி வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வத்துக்கு சமர்ப்பணம்.

என்றும் புன்னைகையுடன் இன்சொல் பேசி அன்புடன் எமை அரவணைத்துக் காத்து அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும், இன்முகத்துடனும், வாழ் வாங்கு வாழ்ந்து இன்று தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தாயின் திருப்பாதங்களில் இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைய மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் முத்துக் குமாரசுவாமியின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்

-குடும்பத்தினர்-

''உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ

-அப்பர் அடிகள்-



மலர்வு 07 - 02 - 1929

உதிர்வு 04 - 11 - 2007

# அமரர்
# திருமதி இராசபூமலர் நமசிவாயம்
# (அம்பிகைப்பிள்ளை)
# அவர்கள்

## *திதி வெண்பா*

சர்வசித்து ஆண்டு ஐப்பசித் திங்கள் பதினெட்டு
அபரபட்ச தசமியென மன்தினமே - பேணுநல
நற்குணத்தாள் இராசபூமலர் இப்பூவுலகைத்
தானொருவிப் பொன்னுலகமுற்றாள் புகல்.

# திருமதி இராசபூமலர் நமசியவாசம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழவளநாட்டின் சிகரமெனத் திகழும் யாழ்நகரின் சற்றுத் தொலைவில் வட்டுக்கோட்டை கிராமத்தில் அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி வீற்றிருந்து அருள் பாலிக்கும் புண்ணிய பூமியில் வேலாயுதர் வினாசித்தம்பி எனும் சான்றோர் தோன்றினார். இவர் தனது பருவகாலத்தில் அதே ஊரைச் சேர்ந்த உறவினர் வழிவந்த அமரர் சுப்பிரமணியம் - தங்கமுத்துவின் சிரேஷ்ட புத்திரி சிவபாக்கியம் எனும் நற்பண்புடையாளைத் திருமணம் புரிந்தார்.

இல்லறம் என்னும் நல்லறம் நடாத்தி வருகையில் இவர்களின் கனிஷ்ட புத்திரியாக இராசபூமலர் 1929ஆம் ஆண்டு மாசித் திங்கள் ஏழாம் நாள் பூவுலகில் அவதரித்தார். இவர் வேலுப்பிள்ளை, தங்கரத்தினம்மா ஆகியோரைத் தனது மூத்த சகோதரர்களாகக் கொண்டிருந்தார்.

இவர் பெற்றோரின் அரவணைப்பிலும் சகோதரர்களின் பாசத்துடனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். தனது கல்வியை வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் கற்றுக் களிப்புற்றார்.

பெற்றோர் இவர் திருமணப் பருவம் எய்தியவுடன் மூளாயில் நரசிங்க முதலி வம்சத்தில் தோன்றிய சோதிடர் அம்பலவாண பிள்ளையின் கனிஷ்ட புத்திரன் திருவாளர் நமசிவாயத்திற்கு 1955ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் திருமணம் செய்து வைத்தனர்.

திருவாளர் நமசிவாயம் மூளாயில் உப தபாலதிபராக கடமையாற்றிக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக்கி இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

" அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை அ∴தும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று. "

என்ற குறளுக்கு ஏற்ப இல்லறத்தின் நற்பயனாக பாலேந்திரா, தவேந்திரா என இரு புத்திரர்களைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

தாய்க்குத் தாயாகவும், தோழருக்குத் தோழராகவும் இருந்து உடலுக்கு உணவோடு, அறிவுக்கு நற்கல்வியும், பண்பும் ஊட்டி பிள்ளைகளை வளர்த்து வந்தார்.

" இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. "

எனும் குறளுக்கு இணங்கத் தனது உற்றார், உறவினர் சினேகிதர் என்று எல்லோரையும் எந்நேரமும் உபசரித்து மகிழ்ந்து வாழ்ந்தார்.

தனது பிள்ளைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகையில், அவர்களுக்கு ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர் கல்வியைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் அமைத்துக் கொடுத்து

" ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய். "

என்ற குறளுக்கு அமையக் கற்பித்து இன்புற்றிருந்தார்.

அந்த நேரத்தில் கணவரும் உடல் நலம் குன்றிக் காணப்பட்டார். பிள்ளைகளும் உயர் கல்வியைத் தொடரமுடியாத நிலையும், பொருளாதாரக் கஷ்டமும் ஏற்பட்டது.

1973ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 24ஆம் நாள் கணவரும் திடீர் சுகயீனமுற்று சிவபதமடைந்தார். எனினும் கணவரின் சகோதரர்களான அமரர் முத்துக்குமாரசாமி (மலேசியா),

நாகபூசணி, வேதநாயகி (மூளாய்) ஆகியோரின் குடும்பத்தினர் முன்வந்து வழங்கிய பொருளாதார உதவிகளுடன் பிள்ளைகளைப் படிக்க வைத்து கணக்காளர்களாக்கி இறுதி வரை இன்புற்றிருந்தார்.

தனது பிள்ளைகளுக்கு உரிய பருவத்தில் இல்லற வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார். சிரேஷ்ட புத்திரன் பாலேந்திரா தமது உறவு வழி வந்த சதாசிவம் - மகேஸ்வரி தம்பதியினரின் தவப் புதல்வி இரங்கநாயகியை மணம் புரிந்து பிரணவி, அருஷன் என்னும் புதல்வர்களை பெற்றார். கனிஷ்ட புத்திரன் தவேந்திராவும் உறவு வழிவந்த பொன்னம்பலம் - யோகேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வி கலாவதியை மணம் புரிந்து கார்த்திகா, தரங்கனி என்னும் புத்திரர்களைப் பெற்றார்.

சகலரும் போற்றத்தக்க முறையில் தனது இரு மருமக்களையும் அன்புடன் அரவணைத்துப் பாசத்துடன் பழகி வாழ்ந்தார். பேரக் குழந்தைகளோடு கொஞ்சிக்குலாவி சிறுகதைகள் பல உரைத்து மகிழ்ந்திருக்கையில் உடல் நலம் குன்றிச் சிறிது காலம் நடை தளர்ந்திருந்தார். சிவசிந்தனையோடு சிவநாமத்தை உச்சரித்த இவர்,

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே

என்னும் திருமந்திரத்திற்கு இணங்க உற்றார், உறவினர் எல்லோரையும் அதிர்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டு நொடிப் பொழுதில் சிவகதி எய்தினார்.

அன்னார் புகுந்த மண்ணில் வீற்றிருக்கும் வதிரன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகர், முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் களுக்குச் சென்று வழிபட்டு வந்ததுடன் சித்திவிநாயகர் ஆலயத்தின் சப்பறத் திருவிழா உபயகாரராகவும் திகழ்ந்தார். அத்துடன், தனது வீட்டு வளவிலுள்ள வைரவர் சுவாமியையும் அயலிலுள்ள மிதியன்கலட்டி பெரியநாயகி அம்மனையும் குல தெய்வங்களாகப் போற்றித் தினம் வழிபட்டு வந்தார்.

திருமதி இராசபூமலரின் வாழ்க்கை அறத்தின் வழியே நின்று எளிய நடையோடும், இனிய முறையோடும் சிவசிந்தனையோடும் அமைந்தது. அன்னாரின் புனித ஆன்மா எல்லாம் வல்ல மூளாய் வதிரன் புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் முத்துக்குமார சுவாமிகளின் பாதார விந்தங்களை அடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!



உ
சிவமயம்



# விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# சரஸ்வதி வழிபாடு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விற்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பங் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத் துட் பொருளாவாள்.

(வெள்ளைத்)

# முருகன் துதி



## அன்பருக்கு அன்பனே நீ வா வா

| | | | |
|---|---|---|---|
| அன்பருக்கு அன்பனே நீ | வா | வா | முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா | வா | முருகா |
| இன்பமய சோதியே நீ | வா | வா | முருகா |
| ஈசனுமை பாலகனே | வா | வா | முருகா |
| உலகநாதன் மருகனே நீ | வா | வா | முருகா |
| ஊமைக்கருள் புரிந்தவனே | வா | வா | முருகா |
| எட்டுக்குடி வேலவா நீ | வா | வா | முருகா |
| ஏறுமயில் ஏறியே நீ | வா | வா | முருகா |
| ஐங்கரனுக் கிளையவனே நீ | வா | வா | முருகா |
| ஆறுமுக வேலவனே | வா | வா | முருகா |
| ஒய்யாரி வள்ளிலோலோ | வா | வா | முருகா |
| ஓங்கார தத்துவமே | வா | வா | முருகா |
| ஔவைக் குபதேசித்தவா | வா | வா | முருகா |
| அகில லோக நாயகனே | வா | வா | முருகா |
| ஓடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா |
| ஆடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா |

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

*சம்பந்தர் சுவாமிகள்*

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

*அப்பர் சுவாமிகள்*

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உனைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

*மாணிக்கவாசகர் சுவாமிகள்*

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

*திருமாளிகைத் தேவர் சுவாமிகள்*

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

*சேந்தனார் சுவாமிகள்*

# திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத வறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழவுழறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய்! மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

*சேந்தனார் சுவாமிகள்*

# திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின் கீ(ழ்)
இருக்க வென்றார்.

*சேக்கிழார் சுவாமிகள்*

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ஏறுமயில் ஏறிவிளை யாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

*அருணகிரிநாதர் சுவாமிகள்*

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

# சிவபுராணம்



## வெண்பா

### திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாத இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவுறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே

ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லி மாலை



வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலே
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தரநாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியோ
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு(து)
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனளி சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக்கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதம்தருசெய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத்தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தா கொண்டாற் பொல்லதோ
எத்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களேபேசும்
பாலாறு தேன்வாய்ப் படிறீ மடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

என்ஆனை என்அரையன் இன்னமுதென்று எல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிய் தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைப்பங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பங்காவே
அன்னவரே எங்கணவ ராவார் அவருகத்ந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கொழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்யார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

பைங்குவளைக் கார்மலசெங்கமலப் பைம்போல்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புலனாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர்அரையற்(கு) இங்ஙனே பித்(து) ஒருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து(து) உடையாள்
என்னத்திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப்பொலிந்(து) எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தமைக் கோதா டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருன்ச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியேங்கட் காரமுதை யோ
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து) ஆடலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ராடேலோர் எம்பாவாய்.

*திருச்சிற்றம்பலம்*

சரணம்

# ஆதி பராசக்தி அன்னை – சரணம்

ஓம் சக்தியே ஆதிசக்தியே மகாசக்தியே சரணம்
ஓம் சக்தியே பராசக்தியே மருவூர்த்தாயே சரணம்
(ஓம் சக்தியே....)

அண்டங்கள் ஈன்றவளே அருவசக்தியே சரணம்
இன்பனிலை இயல்பவளே இச்சாசக்தியே சரணம்
உண்மை என ஒளிர்பவளே ஓம் சக்தியே சரணம்
எண்ணளங்கள் யாப்பவளே ஏகசக்தியே சரணம்
(ஓம் சக்தியே....)

பத்திநெறி வளர்ப்பவளே பராசக்தியே சரணம்
சித்துக்கள் செய்பவளே சிறசக்தியே சரணம்
தத்துவங்கள் தருபவளே தவசக்தியே சரணம்
சித்துக்கும் வித்தானவளே விந்துசக்தியே சரணம்
(ஓம் சக்தியே....)

காலங்கள் கடந்தவளே கிரியா சக்தியே சரணம்
கோலங்கள் கொள்பவளே குடிலாசக்தியே சரணம்
மாலங்கள் அறுப்பவளே மூலசக்தியே சரணம்
ஞாலங்கள் காப்பவளே ஞான சக்தியே சரணம்
(ஓம் சக்தியே....)

## அபிராமி அந்தாதி

*தனம் தரும் கல்வி தரும் ஒரு*
*நாளும் தளர்வு அறியா*
*மனம் தரும் தெய்வ வடிவும் தரும்*
*நெஞ்சில் வஞ்சம் இல்லா*
*இனம் தரும் நல்லன எல்லாம் தரும்*
*அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள்*
*அபிராமி கடைக்கண்களே.*

*-அபிராமி பட்டர்-*

# அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமியே!

# பட்டினத்து அடிகள்

## தன் தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையில் அருளியது

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்திப் பகலாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்?

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு?
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - 'உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே' என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு?

முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையில்
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீ அதனில்; வெந்துபொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை; வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள்; இன்றுவெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

நேரிசை வெண்பா

## சமய குரவர் நால்வர்களின் வயது

திருச்சிற்றம்பலம்

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரவருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக -மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

## சமய குரவர் நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில்
அணைந்த பிரானடி போற்றி
வாழி திரு நாவலூர் வன்
தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்
திருத் தாள் போற்றி.

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனை போற்றி செய்குவாம்.

# நவக்கிரகத் துதி

**சூரியன்**

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

**சந்திரன்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுராய் போற்றி.

**செவ்வாய்**

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலாது அருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

**புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந்தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியே யாளும் உத்தமா போற்றி.

**குரு**

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரகதோஷமின்றிக் கடாட்சித் தருள்வாய்.

**சுக்கிரன்**

சுக்கிர மூர்த்தி சுகம் ஈவாய்
வக்கிரமின்றி வரம் மிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய்
அடியார்க்கருளே.

**சனி**

சங்கடந் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம்
வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்செகம் வாழ
இன்னருள் தாதா.

**இராகு**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆகவருள் புரி அனைத்திலும் வெற்றி
இராகுக் கனியே ரம்மியா போற்றி.

**கேது**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் இரட்சி.



# அருமை அப்பம்மா

பதினேழு வருடங்கள் என் அருகில் இருந்து
என்னைத் தூக்கி வளர்த்த அப்பம்மா
இன்று என்னை விட்டு தூரமாகியது
ஏனோ ...........!

நான் தத்தி நடக்கையில் - என் பிஞ்சு
கால்கள் நோகாமல் - உம்
உள்ளங்கைகளில் தாங்கினீரே! இப்போது
எங்கு சென்றீர்.....?

உங்கள் கரம் பிடித்து நடனம் புரிகையில்
என்னுடன் சேர்ந்து குழந்தையாக மாறி
நடனம் புரிந்தீரே ! இப்போது
எங்கு சென்றீர்......?

இசையுடன் பாடல்களையும் கனிவுடன் கதைகளையும்
இளம்வயதிலேயே கற்றுத்தந்தவர் - நீங்கள்
அல்லவா ! கண்ணீர் சொரிகின்றேன் - இப்போது
எங்கு சென்றீர் ...?

பள்ளி விட்டு வருகையில்
வாசலில் என்னை புன்னகையுடன்
வரவேற்பீரே! இப்போது
எங்கு சென்றீர்.......?

காலை விடிந்தவுடன் - என்னை
கண் அசைவில் அழைத்து
பொட்டுவைக்க கூறுவீரே! - இப்போது
எங்கு சென்றீர்.......?

மண்ணிலும் தேடினேன்
விண்ணிலும் தேடினேன் - என்
கண்ணில் தெரிகின்றீர்!

அருமைப் பேர்த்தி,
**பா.பிரணவி.**

# சடுதியாய் வருவீரோ !

பாசத்தைப் பொழிந்து பார்த்துப் பார்த்துச் செய்வீரே
என் அருமை அப்பம்மாவே!
இப்போதெல்லாம் உமக்கு நான் பார்த்துப் பார்த்துச் செய்கிறேனே
என் அருமை அப்பம்மாவே!

நான் கண் கொடுத்துப் பார்க்க இயலாத
அளவில் நீர் என்னை விட்டுப் பிரிவதற்காகத் துடித்தீரே!
என்னை விட்டுப் பிரிய உமது மனம் துடித்ததே அன்று
இது தான் அந்தக் கடவுளின் சதியோ!

என் மனம் செல்கிறது பதின் நான்கு வருடமாய்
உம்முடன் இருந்தேனே அந்தப் பதினைந்து விநாடியும் அன்று துடித்தீரே
கதையாம் பாடலாம் என்றும் என்னைக் குதூகலப்படுத்துவீரே
அன்றே உம்முடன் கதைகள் எல்லாம் இறந்துவிட்டன.

என்னால் தாங்க இயலாது உம்பிரிவை!
வையகத்தில் இருந்து நீர் செய்தது இன்னும் என் மனதில்
அன்புடன் அழைக்கும் உம் குரலும் இன்னும் என்காதில்
எங்கே! எங்கே!! என் அருமை அப்பம்மா சடுதியாய் வருவீரோ?

என்றும் உங்கள்,
அருமைப் பேரன்,
பா.அருஷன்.

# TEARING HEARTS

It's too  hard to pass our days; a day seems to be a week,
The feeling is very hard, why our heart doesn't accept it....?
We wish, you never left us.

Each moment spent with you, gives us healthy thoughts,
Never knew your presence would be as precious as our life
You were everything for us, to sit on your lap and to cry
How could we ever fill the gap you left?

Wherever we look, we see your face
Wherever we go, we hear your voice
Whenever we ask you to tell stories, you tell them
Whenever we sing, you sing with us
The dreams we see, and the breeze we feel;
You come alive!

The December wind brings your thoughts in our dreams
The breeze sinks us  in the thought of your powerful feeling,
You had a good reason towards life, which keeps away all our tears
You lived for us; you were so melodious to care us,
The songs, the stories, the lessons and the goal,
That's our passion towards our future

You are an everlasting memory in our hearts
You are an inspiration for our future
You are an influence in all our deeds
You still live with us

No matter how hard we try to wear a smile,
Sudden tears flow down all the times
When thinking, you are no more with us
Our hearts begin to tear!

**"MAY YOUR SOUL REST IN PEACE"**

Grand Daughters,
Karthiga,
Tharangani.

## அம்மம்மாவை ஈடு செய்த ஆச்சி!

எங்கள் அம்மம்மா நாமிருவரும் பிறக்க முன்னரே சிவபதம் அடைந்துவிட்டார். சிறு வயதில் நாம் பாடசாலைக்குச் சென்ற காலத்தில் சில மாணவர்கள் தங்கள் அம்மம்மா தேவாரங்களும் பள்ளிப் பாடங்களும் சொல்லிக் கொடுத்ததாகக் கூறிய பொழுது, எங்களுக்கு வேதனையாக இருந்தது. அன்றும் இன்றும் அம்மம்மாவின் படத்தைப் பார்த்து அவரை நாம் கற்பனை செய்கின்றோம். அவர் மிகவும் அன்பானவர், இரக்கமானவர் என அறிகிறோம்.

கடவுள் எம்மைக் கைவிடவில்லை. பாசமிகு ஆச்சி, அம்மாவின் அன்பு மாமி, எங்கள் அம்மம்மாவின் ஸ்தானத்தை ஈடுசெய்தது, எமக்கு என்றும் நீங்காத நினைவுகளாக இருக்கின்றன. ஆச்சியின் உதவிகளை எண்ணி எண்ணிப் போற்றுகின்றோம், மதிக்கின்றோம்.

அன்புத் தெய்வமாக, அம்மம்மாவுக்கு அம்மம்மாவாக, வழி நடத்திய ஆசை ஆச்சி எங்களை விட்டுப் பிரிந்தாலும்அன்னாரின் நினைவுகள் எங்களோடு வாழ்கின்றன. அருமை ஆச்சியின் ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வங்களான பிள்ளையாரையும் முருகனையும் வைரவரையும் வேண்டுகின்றோம்.

*அன்பு மறவாத,*

*பே.அருளீசன், பே.தாரணி*

*(பேரப்பிள்ளைகள்)*

## எங்கள் அருமை மாமி

எமது அருமைத் தாயாருக்கு பாசமிகு மைத்துனியாகவும் எங்களுக்கு என்றும் அன்புள்ள மாமியாகவும் எம்மத்தியில் ஐம்பத்தி மூன்று வருடகாலமாக பெருமையோடு எங்களுடன் இணைந்து வாழ்ந்து வருகையில் அவர் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்தோம். இவ் இழப்பானது எங்களுக்கு மட்டு மன்றி அன்னாரின் குடும்பத்துக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் மிகப் பேரிழப்பாகும்.

எங்கள் அம்மா எம்மை விட்டுப் பிரிந்த நாள் முதலாக மாமி எங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் அம்மாவாகவும் கடந்த முப்பத்தி மூன்று ஆண்டு களாக இருந்து கொண்டிருக்கையில், திடீரென காலன் உங்களை அழைத்தது ஏனோ? எல்லாம் நன்மைக்கே. அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும் அன்பு மைத்துனி வழி மருமக்கள்.

சுகயீனமாக இருப்பதை அறிந்த நாள் முதலாக தினமும் உங்களை வந்து பார்த்த எனக்கு இறுதி மூச்சு பிரியும் நாளன்று வந்து பார்த்ததும் வருத்தத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து ''மாமி உங்கள் இளையமகன் தவேந்திரா வந்திருக் கின்றேன் இனி ஒன்றுக்கும் யோசிக்காமல் பாலைக் குடியுங்கோ" என்று சொல்லியபடி பாலைப் பருக்க, நீங்கள் குடித்த ஓரிரு நிமிடத்தில் அவ்விடத்தில் நின்ற உங்கள் மூத்த மருமகள், பேரப் பிள்ளைகள், உற்றார், உறவினர், சினேகிதர் யாவரையும் வியக்க வைக்கும் படியாக மூடிய நிலையில் இருந்த கண்களை முழுதாகத் திறந்து மேலே பார்த்தபடியே இறைவனிடம் சென்றுவிட்டீர்களே மாமி! நம்பமுடியவில்லை.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய மூளாய் வதிரம்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமியை வேண்டி நிற்கும் ஆருயிர் மைத்துனி வழி மருமகன் அன்புடன் உங்களோடு வாழ்ந்து அமரத்துவம் அடைந்த மைத்துனர் முருகேசபிள்ளை மைத்துனி வேதநாயகி குடும்பத்தினர் சார்பாக

மருமக்கள் : அருமை நாயகம் சிவபாக்கியம் (கமலா)
பேரின்பநாயகம் குடும்பம்,
சிவபாலன் குடும்பம்.

# எம் மனதில் நீங்காது நிலைத்திருக்கும்

## எம் அருமை மாமியே ! (ஆச்சியே!)

எங்கள் குடும்பத்திற்கு மாமியாய் (ஆச்சியாய்) இருந்திருந்தாலும் எமது குடும்ப உறுப்பினர் போன்று எம்முடன் இணைந்து வாழ்ந்து பாசத்துடன் உபசரிக்கும் பற்றுள்ளம் கொண்ட எமது அருமை மாமியின் (ஆச்சியின்) மறைவானது அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி, எமது குடும்பங்களிற்கும் பேரிழப்பாகும்.

எமது குடும்பங்களின் அனைத்து நன்மை, தீமைகளில் தாய்க்குத் தாயாகவும், மாமியாகவுமிருந்து வழிகாட்டிய நீங்கள் எங்களையெல்லாம் விட்டுச் செல்ல இறைவன் அழைத்தது ஏனோ?

காலத்தால் நீவிர் எம்மைப் பிரிந்தாலும் ஞாலம் உள்ளவரை யாம் உம்மை மறவோம். காயாத விழி நீரால் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் சித்திவிநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி.க.முத்துகுமாரு (தேவி)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# சின்னமாமி

அன்பிற்கும் பாசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய எனது சின்னமாமி, இறைவனடி சேர்ந்ததையிட்டு நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன். குழந்தைப் பருவத்தில் மாமி என்னை மிகப்பாசத்துடன் ''என்னுடைய அண்ணையின் மகன், என்னுடைய அண்ணையின் மகன்'' எனக் கூறிக் கொண்டு தூக்கித் திரிந்து மகிழ்ச்சி அடைந்தார் என அறிகின்றேன். நான் வளர வளர இற்றைவரை என்னுடன் அன்பாக இருந்தார்.

சின்னமாமி, சிறுவயதிலிருந்து தையல், பின்னல், பன்னை வேலை என்பவற்றில் ஆர்வமாய் இருந்தார். அவர் அழகான பனை ஓலைத் தொப்பிகள் தயாரித்து எனது அப்பாவுக்கு கொடுத்தார். அப்பாவும் விருப்பமாக அணிந்தார்.

திருமணமாகி மணமக்களாக முதல் முறை மாமி, மணமகன் இல்லத்திற்கு வில்லுவண்டியில், கண்ணீர் பெருகக் கவலையாகச் சென்றது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. மூளாய் சோதிடர் மாரிமுத்தர் அம்பலவாணபிள்ளையின் கனிட்ட புத்திரனான எனது சின்னமாமாவுடன் கீழ்ப்படிவுள்ள மனைவியாக களிப்புடன் கடமைகளை நிறைவேற்றினார். நான் மாமா வீட்டிற்குச் சென்ற வேளைகளில் ஒரு மாநாடு நடைபெறுவது போன்று ஆட்கள் இருப்பார்கள். அமைதியான சுற்றாடலும் உறவினர்களும் சின்னமாமிக்கு ஆனந்தம் அளித்தன.

சின்னமாமா சிவபதம் அடைந்த பின்னர் பிள்ளைகள் இருவரும் கொழும்பில் இருக்கும் பொழுது ஒரு ஞாயிற்றுக்கிழமை மாமி எனது இல்லத்திற்குக் காலையில் வந்து, என்னோடு அளவளாவிக் கொண்டிருக்கையில் எனது தாயார் சிரித்தபடி பின்வருமாறு சின்னமாமிக்குக் கூறினார். ''நீர் செல்லப்பிள்ளை, உமக்கு அன்பான மச்சாள்மாரும் மருமக்களும் (சின்னமாமாவின் சகோதரிகளும் பிள்ளைகளும்) கிடைத்திருக்கிறார்கள். சந்தோஷமாகப் பொழுது போகிறது. எனக்கு வீட்டுவேலைகளுடன் காலம் கழிகின்றது". அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும் மாமி சிரித்தார். அன்று மாலை வீட்டுக்குச் சென்றதும், மைத்துனி கூறியவற்றைப் புன்னகையோடு மருமக்களுக்கு எடுத்துரைத்தாராம். அவர்களும் ''உண்மை தான். மாமி அன்றும், இன்றும், இனிமேலும் செல்லப்பிள்ளையாக இருக்க கடவுள் கருணை புரியட்டும்.'' எனக் கூறினார்களாம்.

சின்னமாமி எல்லோரிடமும் அன்பாகப்பழகி, அன்பைப் பெற்று, ஆண்டவனை அடைந்துவிட்டார். அருமை மாமியின் ஆத்ம சாந்திக்காய் எனது மனைவியும் பிள்ளைகளும் நானும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
அன்பு மருமகன்,
வே. கணேசரத்தினம்.

## சம்பந்தி புலம்பல்

சாசெய்தி கேட்டவுடன் நானும் மக்களும் உற்றார், உறவினரும் ஏகம்பட்டே மண்ணில் வீழ்ந்தோம். வந்திடவுமியலாதுற்றோம் என்னருமை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளையும் தவிக்கவிட்டு நீ பிரிந்தாய்! உன்னை நானிழந்தேன் என்செய்வேன்? மாமியென செல்லமுடன் எல்லோரும் அழைத்திடவே நீயும் அதன் கைமாறாய் என்னையும் மாமியென்றே அழைத்து உனக்கேயுரிய புன்னகை பூத்திடுவாய். குழந்தைபோல் பேசி எமையெல்லாம் குதூகலத்தில் ஆழ்த்திடுவாய். உற்றார், உறவினரை உபசரிப்பில் உனக்கு நிகர் நீயென வாழ்ந்துவிட்டாய். எங்குன்னைக் காண்பேனினி என்னருமைச் சம்பந்தியே!

*திருமதி.யோகேஸ்வரி பொன்னம்பலம்*

# எங்கள் ஆசை மாமி

எங்களது ஆசை மாமியாக இருந்து ''குட்டி மாமி'' எனச் செல்லமாக எம்மால் அழைத்து வந்த எங்கள் அருமை மாமி எம்மை விட்டுப் பிரிந்தது எம் யாவருக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

எங்கள் குடும்பத்தின் ஆறுதலுக்கும் மனச் சந்தோஷத்துக்கும் உரியவராக இருந்து தனது பிள்ளைகளைக் கண்டால் ஒரு தாயின் முகத்தில் எவ்வளவு பூரிப்புத் தெரியுமோ அவ்வாறே எமது குடும்பத்தில் உள்ள அனைவரையும் கண்டவுடன் மாமியின் முகத்தில் ஏற்படும் பூரிப்பையும் களங்கமற்ற சிரிப்பையும் இனி எப்போ காண்போம்? அது மட்டுமல்ல அன்னாருடன் கதைக்கும் பொழுது ஒரு தாய் தன் குழந்தையுடன் கதைத்து சிரித்து மகிழ்வது போன்ற உணர்வு எங்களுக்கும் ஏற்படும். கதைக்கும் நேரம் அவ்வளவும் எமது கவலைகள் யாவற்றையும் மறந்து மகிழ்ச்சியில் மூழ்கியிருப்போம். எனவே ஒரு தாயாகவும் மழலையாகவும் எங்கள் யாவருக்கும் ஆறுதல் தந்த ஆசை மாமியை இழந்து தவிக்கின்றோம்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல் மாமியை போல் களங்கமற்ற உள்ளமுள்ள ஒருவரை இனிக் காண்பது அரிது. ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ'' அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

***கந்தையா (கார்த்திகேசு)***
***குடும்பம்***

**சி.ஜெயானந்தசர்மா**
பிள்ளையார் கோவில்,
மூளாய்,
சுழிபுரம்.



**S.JEYANANTHASARAMA**
PILLAIAR KOVIL,
MOOLAI,
CHULIPURAM.

## மூளாய் அமரர் திருமதி இராசபூமலர் நமசிவாயம் (அம்பிகைப்பிள்ளை)

இவர் வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூமலர் நமசிவாயம் அவர்கள் 4.11.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அதனைக் கேள்வியுற்று மிகவும் மனவேதனையும் கவலையும் அடைந்தோம். இவர் கடவுள் பக்தியும் அன்பும் நிறைந்தவர்.

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தில், தவறாது வந்து வழிபட்டுச் செல்பவர். சித்திவிநாயகர் ஆலயச் சப்பறத் திருவிழாவை ஒன்று விட்ட ஒரு வருடம் மிகவும் சிறப்பாகச் செய்து வந்தவர். கணவர் காலஞ்சென்றாலும் இவரும் இரு புதல்வர்களுமான பாலேந்திரா, தவேந்திரா ஆகியோர் தங்கள் சப்பறத் திருவிழாவைப் புதியதாக அமைத்துச் செய்து வருகின்றார்கள்.

இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வதிரன்புலோ சித்தி விநாயகரைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நன்றி.

சி.ஜெயானந்த சர்மா,
வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்,
மூளாய்.

# இராஜதீபமேற்றிய இராசபூமலர்

சிறிய உருவம், கூசிப்பார்க்கும் சிறிய கண்கள், சிறிய நெற்றி, அதில் எப்பொழுதும் ஒளிர்ந்து மிளிரும் திருநீற்றுக் கோடுகள். வாய் நிறைய பொக்கை வாய்ச் சிரிப்பு, அந்தச் சிரிப்பினூடே ''வாங்கோ'' என்று வாயார வரவேற்கும் பண்பான பாங்கு. இத்தனையும் நிறைந்த ''குட்டி மாமி'' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் இராசபூமலர் என்னும் நிறைவாக வாழ்ந்த பெரு மூதாட்டியின் மறைவு துயரைத்தருகிறது.

வட்டுக்கோட்டையில் பிறந்து மூளாய் எனும் புண்ணியபூமியில் சைவ வேளான் குலதிலகரும் எல்லோராலும் ''சாத்திரியார்'' என்று அன்போடு அழைக்கப்பட்டவருமான அம்பலவாணர் நமசிவாயம் எனும் பெரியாரை மணந்து,

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது ''

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்குக்கு அமைய இல்லற வாழ்க்கை வாழ்ந்து பாலேந்திரா, தவேந்திரா எனும் நல் மக்களைப் பெற்று, சீரும் சிறப்புமாக வாழ்ந்து மறைந்தவர் ''குட்டிமாமி'' எனும் நல் மூதாட்டி.

இம் மூதாட்டி தன் கணவன் பரம்பரையினர் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் செய்து வந்த சப்பறத் திருவிழாவை இன்று வரை குறைவறத் தன் மக்கள் துணையுடன் ஆற்றி வந்த பெரு நங்கை, சித்தி விநாயகரின் சிறந்த பக்தை.

அதுமட்டுமன்றித் தன் கணவர் கூட்டுறவுச் சேவையில் காட்டிய ஈடுபாட்டைத் தன் வீட்டில் மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் இயங்க உதவியதுடன் அதன் அங்கத்தவராக இருந்து அச்சங்கம் மேன்னையுற நல்வழிகாட்டிய நல்மங்கை!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

''சித்தி விநாயகர் கருணை மகத்தானது''

*க.செல்வராசா,*
*தலைவர்,*
*மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்*
*தேவஸ்தான பரிபாலன சபை.*

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்து
எம்மையெல்லாம் நல்வழியில் ஏற்றி வழிகாட்டி
வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வம்
**அமரர் திருமதி இராசபூமலர் நமசிவாயம்**
அவர்களின் மறைவு கேட்டு நேரிலும் தொலைபேசியிலும்
தொலைநகல் மூலமும் எமக்கு ஆறுதலளித்து
கொழும்பில் ஈமக்கிரியையின் போதும் நேரில் சமுகம்
அளித்து தங்களின் அனுதாபங்களைப் பகிர்ந்து
கொண்ட அனைவருக்கும் மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள் மேலும் பல வழிகளில் உதவியளித்த
அனைவருக்கும், மலர்வளையம், மலர்மாலைகள்
சாத்தியவர்களுக்கும்
இன்றைய அந்தியேட்டி, சபிண்டீகரணம் ஆகியவற்றில்
கலந்து சிறப்பித்தவர்களுக்கும் இந்நூலை கணினி
அமைப்பில் வடிவமைத்துத் தந்த Fast Printers
அச்சகத்தாருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்
உரித்தாகட்டும்.



"சாஸ்திரியார் வளவு"
மூளாய் - கிழக்கு,
சுழிபுரம்

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுபம்




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ. அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Fast Printer 289-1/2, Galle Road, Colombo - 06 T.P-0776449885